NEWBEC

NEW WAY OF BEING CHURCH | பாஸ்கா காலம் 6 ஆம் ஞாயிறு | 25 மே 2025

**எதிர்நோக்கிய திருப்பயணிகளாகக் கொண்டாடுதல், செவிமடுத்தல், மற்றும் பயணித்தல்**

மாதாந்திர நோக்கம் மற்றும் கருப்பொருள்:

குடும்பம் - சவால்களை எதிர்கொள்ளும் குடும்பங்களுக்கு துணையாக இருக்க அழைப்பு



# உலகம் தரமுடியாத அமைதி, அது உங்களுக்கு என் பரிசு

"அமைதியை உங்களுக்கு விட்டுச் செல்கிறேன், என் அமைதியையே உங்களுக்கு அளிக்கிறேன்".. என்ன ஒரு அழுத்தமான வார்த்தைகள். கிறிஸ்து நம்மை இவ்வாறு தான் அன்பு செய்கிறார். நம் இதயங்களால் அந்த ஒப்பற்ற பரிசை தாங்கிக்கொள்ள இயலாது. இந்த அன்பைப் பெற நாம் தகுதியற்றவர்கள். இருந்தபோதும் நம்மில் நிலைத்திருக்க இயேசு விரும்புகிறார்.

முதல் வாசகத்தில் தொடக்கக் கால திருஅவையின் சவால்கள் மற்றும் வளர்ச்சியைப் பற்றிய புரிதலை நாம் காண்கிறோம். தொடக்க கால கிறிஸ்தவர்கள் எவ்வாறு வாழவேண்டும், வழிபடவேண்டும் என்பது குறித்து முரண்பாடான போதனைகள் மற்றும் விவாதங்கள் இருந்தன. இந்தக் கருத்தில் சிலர் விருத்தசேதனம் செய்யப்படவேண்டும் என்று கூறுகிறார்கள். சிலர் இதற்கு உடன்படவில்லை. இந்த மோதலை தீர்க்க யெருசலேமில் உள்ள அப்போஸ்தலர்களைக் கலந்தாலோசிக்கவேண்டும் என்று அப்போது முடிவு செய்யப்பட்டது. திருஅவையுடன் தங்கள் நம்பிக்கையிலும், செயல்களிலும் ஒற்றுமையைத் தேடுவதாகும். யெருசலேமின் முதல் சங்கத்தில் புறவினத்தை சார்ந்த நம்பிக்கையாளர்கள் விருத்தசேதனம் செய்யத் தேவையில்லை. மோசேவின் சட்டங்கள் அவர்களுக்குச் சுமையாக இருக்ககூடாது என்று முடிவு செய்யப்பட்டது. யூத சமூகத்திற்கு அப்பால் கிறிஸ்தவத்தை ஊக்குவிக்கும் ஒரு முக்கியமான முடிவு இது.

நம்மைப் போலவே திருஅவையின் போதனைகள் மற்றும் வழிகாட்டுதல்களினால் நம்பிக்கையாளர்கள் மகிழ்ச்சியடைந்தனர். புதிய யெருசலேம் என்ற இந்தப் புதிய நகரத்தைப் பற்றிய யோவானின் காட்சி, நம்பிக்கையின் அடையாளமாகவும், கடவுளுடனான எதிர்கால வாக்குறுதியாகவும் உள்ளது. அங்கு கடவுளின் மாட்சி ஒளிவீசியது. மற்றும் முழு பிரபஞ்சமும் கடவுளின் திட்டத்தின்படி ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. கடவுள் எல்லா இடங்களிலும் இருப்பதால், நகரில் ஒரு ஆலயம் தேவையில்லை. கடவுளும் ஆட்டுக்குட்டியுமே அந்த ஆலயமும் ஒளியுமாகும்.

நற்செய்தி வாசகம், இயேசுவின் இறுதி இராவுணவின் ஒரு பகுதியாகும். இது அவரது சிலுவை மரணம், உயிர்த்தெழுதல் மற்றும் விண்ணேற்புக்கான ஒரு முன்னோட்டமாகும். இது ஒரு பிரியாவிடை உரை. அவர்களில் நிலைத்திருக்கவேண்டும் என்னும் தனது விருப்பத்தை இயேசு கூறினார். அவர்கள் இயேசுவை அன்பு செய்தால், அவரும் தந்தையும் அவர்களிடம் வருவார்கள். தம்முடைய சீடர்களின் அச்சத்தைப் போக்க, அவர் பரிந்து பேசப்போவதாக உறுதியளித்தார். தந்தை தூய ஆவியாரை அனுப்பி, இயேசு கற்பித்து அனைத்தையும் அவர்களுக்கு நினைவூட்டுவார். இறுதியாக அவர் கூறியது. அஞ்சவேண்டாம். தெய்வீக அமைதியை விட்டுச்செல்வதாக கூறுகிறார். இந்த மூன்று செய்திகளும் நமக்கானவை. நாம் அவரைத் தொடர்ந்து அன்பு செய்து, தூய ஆவியார் நம்மை வழிநடத்த அனுமதித்தால் நாம் அச்சம் கொள்ளத் தேவையில்லை. தூய ஆவியாரே வாரும், நீர் எமக்குத் தேவை. ✣

ஆரோக்கியமான குடும்ப வாழ்க்கைக்கு மூன்று சொற்றொடர்களை அடிக்கடி பயன்படுத்தவேண்டும். இதை நான் செய்யலாமா? நன்றி, என்னை மன்னியுங்கள். ஒரு போதும், ஒரு போதும், சமாதானம் செய்யாமல் அந்த நாளை முடிக்கவேண்டாம்.

*திருத்தந்தை பிரான்சிஸ்*

**இன்றைய இறைவார்த்தை:**

திருத்தூதர் பணிகள்: 15: 1-2, 22-29

திருப்பாடல்: 67: 2-3, 5-6, 8

திருவெளிப்பாடு: 21: 10-14, 22-23

யோவான் 14: 23-29

INTERNAL CIRCULATION ONLY
BUL 21/2025

Published by: Archdiocesan Pastoral Institute (API) | Email: api@archkl.org